

# "ராஜ கோபுரத்தை பலப்படுத்துவோம்"

## ஸ்ரீரங்கம் அறங்காவலர் அதிரடி பேட்டி!

சல்மான்

**வை**ணவ பக்தர்களால் 'பூலோக வைகுண்டம்' என அழைக்கப்படும் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில் ராஜகோபுரம் ஆசியாவிலேயே மிகப் பெரியது. ராஜகோபுரத்தில் பல இடங்களில் விரிசல்கள் தென்படுவதால் பொதுமக்களில் பலர் அறநிலையத்துறை அதிகாரிகளுக்கும், தமிழக முதல்வருக்கும் கோரிக்கை மனு அனுப்பி ராஜகோபுரத்தைக் காப்பாற்றும் நடவடிக்கையில் ஈடுபட வற்புறுத்தி வந்தனர். காளஹஸ்தி கோயில் ராஜகோபுரம், விரிசல்கள் உரியநேரத்தில்கவனிக்கப்படாததால்கடந்தமாதம் இடிந்து விழுந்தது. இதைத் தொடர்ந்து தமிழகஅரசுநிபுணர்குழுஒன்றைஅமைத்து ஸ்ரீரங்கம் ராஜகோபுரத்தை ஆய்வு செய்து அறிக்கை தர உத்தரவிட்டது. இந்த ஆய்வுக் குழுவினர் திங்கள் கிழமையன்று திருச்சி வந்து ராஜகோபுரத்தை ஆய்வு செய்துவிட்டுப் போயினர்.

இருநூற்று முப்பத்தி ஆறு அடி உயரத்தில் பதிமூன்று நிலைகளை (அடுக்குகள்) கொண்டது ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில் ராஜகோபுரம். சுமார் நானூறு ஆண்டுகளாக இருபத்தி ரெண்டு அடி உயரம் கொண்ட மொட்டை கோபுரமாக கோயிலின் தெற்கு நுழைவாயில் காட்சியளித்தது. எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது இந்த மொட்டை கோபுரத்தின் மீது மிகப் பெரிய ராஜகோபுரம் கட்ட முடிவு செய்யப்பட்டது. பிறகு 236 அடி உயரம் கொண்ட ராஜகோபுரம் கட்டி முடிக்கப்பட்டு 1987ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. மிகவும் பழமையான மொட்டை கோபுரத்தின் மீது பல டன் எடை கொண்ட கட்டிடம் கட்டப்பட்டதால் கோபுரத்தில் சில இடங்களில் விரிசல்கள் விழ ஆரம்பித்தன. ஸ்ரீரங்கத்துக்காரரான எழுத்தாளர் சுஜாதா உள்ளிட்டோர் கோபுரத்தில் ஏற்படும் விரிசல்கள் பற்றி அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்றனர். 1992ஆம் ஆண்டு நிபுணர் குழு ஒன்று கோபுரத்தை ஆய்வு செய்து விட்டுப் போனது.

கடந்த மாதம் காளஹஸ்தி கோயிலின் ராஜகோபுரம் இடிந்து விழுந்ததால் ஸ்ரீரங்கத்து வாசிகள் பதைபதைத்துப் போனார்கள். அவர்களின் பதற்றத்தைத் தணிக்க நிபுணர் குழு ஒன்றை அமைத்தது தமிழக அரசு. ஸ்ரீரங்கம் வாசிகள் சரமாரியாக கேள்விக்கணைகளால் துளைத் தெடுக்க மழுப்பலாகப் பதிலளித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டுப் போயினர் நிபுணர் குழுவினர்.

கோயிலின் ராஜகோபுரத்தின் பதிமூன்று நிலைவரை நிபுணர் குழு ஏறிச் சென்று ஆய்வு செய்தது. இந்த நிலைகள் பல ஆண்டுகளாக துப்புரவுக்கூட செய்யப்படாமல் இருப்பதைக் கண்டு அதிர்ந்து போயினர் நிபுணர் குழுவினர். கோபுர அடுக்குகளின் மேல் தளங்களில் தேன் கூடுகளும், கீழ் தளங்களில் செடி, கொடிகளும் நிறைய உள்ளன. 'ஆண்டிற்கு ஒரு முறை இவற்றை சுத்தம் செய்திருந்தால்கூட இந்த மாதிரி நிலை